# வருமான வரி கணக்கிடும் படிவம்

**மார்ச் 2016 முதல் பிப்ரவரி 2017 வரைக்கான காலம்**

(அரசாங்க ஊழியர்களுக்கு மட்டும்)

**நிதியாண்டு 2016 – 2017**
**மதிப்பீடு ஆண்டு 2017 – 2018**

“தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

**நிறுவனத்தின் பெயர்**

**சம்பள பட்டுவாடா அதிகாரி (DDO)** **TAN** | | | | | | | | | | |

**ஊழியர் பெயர்:** ஆண்/பெண் **PAN** | | | | **P** | | | | | | |

**ஊழியர் பதவி:** பிரிவு / துறை

| | விவரங்கள் | உள் கணக்கீடு | ரூபாயில் |
|---|---|---|---|
| 1 | **மொத்த சம்பள வருமானம்** (அடிப்படை ஊதியம் + அகவிலைப்படி + வீட்டு வாடகைப்படி+மற்றும் இதரப்படிகள்) | | ரூ. |
| 2 | **கழிக்க:** வீட்டு வாடகைப்படி(HRA) (பிரிவு10(13A) & (அரசுரிமை 12A கீழ் விலக்கு) வாடகைப்படி பின்வரும் (i, iii,iv) ல் எவை குறைவோ<br>(i) மொத்தம் பெற்ற வீட்டு வாடகைப்படி (ரூ. x12 மாதங்கள்)<br>(ii) வீட்டு வாடகை செலுத்தப்பட்ட தொகை (ரூ. x12 மாதங்கள்)<br>(iii) வருட வாடகையிலிருந்து, 10% மொத்த வருமானத்தை (Pay+GP+DA)கழித்தல்<br>(iv) மொத்த வருமானத்திலிருந்து 40% (அ) 50% (Pay+GP+DA) | <br>ரூ.<br>ரூ.<br>ரூ.<br>ரூ. | ரூ. |
| 3 | **கழிக்க:** தொழில் வரி செலுத்தியது பிரிவு 16(iii) | | ரூ. |
| 4 | **மொத்த சம்பள வருமானம் (1–2–3)** | | ரூ. |
| 5 | **வீட்டு வருமானம் : பிரிவு-24B**<br>**A. குடியிருக்கும் வீடு:-**<br>வீட்டு கடன் மீதான செலுத்த வேண்டிய வட்டி ......................................<br>(1.4.1999 க்கு பிறகு பெறப்பட்ட வீட்டுக் கடனுக்கு ரூ.2,00,000 வரை வரிசலுகை பெறலாம். மற்றும் வீடு புதுப்பித்தலுக்கான பெறப்பட்ட கடனுக்கு ரூ.30,000 வரை வரி சலுகை பெறலாம்)<br>**B. வாடகைக்கு விட்டது:**<br>மொத்த வருடாந்திர வாடகை (a) ............................................................<br>கழிக்க: வீட்டுவரி செலுத்தியது (b) .........................................................<br>கழிக்க: 30% தோராய கழிவு (a-b)*30%..................................................<br>கழிக்க: வீட்டு கடன் மீதான செலுத்த வேண்டிய வட்டி.........................<br>(மொத்த வட்டியையும், வரிச்சலுகையாகபெற முடியும் உட்சவரம்பு கிடையாது) | ரூ. (-)<br><br><br><br><br>ரூ.<br>ரூ.<br>ரூ.<br>ரூ. | ரூ.(-)<br><br><br><br><br><br><br><br>ரூ. |
| 6 | பிற வருமானங்கள்<br>குடும்ப ஓய்வூதியம், வட்டி வருமானம் போன்றவை | | ரூ. |
| 7 | **ஆண்டு மொத்த வருமானம் (4+5+6)- GROSS TOTAL INCOME** | | ரூ. |
| 8 | **அத்தியாயம் VIA படி வரிசலுகைகள்**<br>(80CCE= 80C+80CCC+80CCD) அதிகபட்ச வரிசலுகை 1.5லட்சம்<br>a) பிரிவு 80 C<br>i. ஆயுள் காப்பீட்டு தவணைத் தொகை செலுத்தியது..................<br>ii. சேம நல நிதி - GPF/TPF/EPF/VPF/CPS...........................................<br>iii. 15 ஆண்டுகள் பொது சேமநல நிதி (PPF) ................................<br>iv. ஒட்டு மொத்த கால வைப்பு நிதி CTD.......................................<br>v. தேசிய சேமிப்பு சான்றிதழ்(NSC)தேசிய சேமிப்புத் திட்டம் (NSS) (முதலீடு + சேர்ந்த வட்டி)..........................................................<br>vi. பரஸ்பர நிதியங்கள் ULSS/ELSS......................................................<br>vii. வீட்டுக் கடனில் திரும்ப செலுத்திய அசல் தொகை.................<br>viii. ஆவண வரி & பதிவு கட்டணங்கள்..........................................<br>ix. உள் கட்டமைப்பு பத்திரங்களின் முதலீடு....................................<br>x. கல்விக் கட்டணம் செலுத்தியது பள்ளி/கல்லூரி (2 குழந்தைகளுக்கு) ................................................... ...................<br>xi. 5 வருட வைப்புத் தொகை வங்கி மற்றும் தபால் நிலையம் .......<br>xii. சிறப்பு சேம நிதி (SPF) + குடும்ப நல நிதி (FBF) ........................<br>xiii. செல்வ மகள்/மகன் திட்டம்.......................................................<br>xiv. மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம் (SCSS) .................................<br>xv. மற்ற முதலீடுகள் ......................................................................<br>b) பிரிவு 80CCC – ஓய்வூதிய நிதி பங்களிப்பு...................................................<br>c) பிரிவு 80CCD(NPS) – மத்திய அரசின் பங்களிப்பு ஓய்வூதிய திட்டங்கள் கூட்டுக (a+b+c) அதிகபட்சம் ரூ. 1,50,000/– | <br><br><br>ரூ.<br>ரூ.<br>ரூ.<br>ரூ.<br>ரூ.<br>ரூ.<br>ரூ.<br>ரூ.<br>ரூ.<br>ரூ.<br>ரூ.<br>ரூ.<br>ரூ.<br>ரூ.<br>ரூ.<br>ரூ.<br>ரூ. | ரூ. |
| 9 | பிரிவு 80CCD(1B)- பங்களிப்பு ஓய்வூதியத்திட்டம்(CPS) கூடுதல் ரூ.50000/- வரை. CPS கழிவு இல்லாமல் பிரிவு 80Cன் படி ரூ.150000/- வரி விலக்கு பெற்றால் கூடுதலாக ரூ.50000/- வரை CPS-ல் பெற்ற கழிவினை இப்பிரிவின் படி வரிவிலக்கு பெறலாம். (ரூ1.5L + ரூ.50000/-) | | ரூ. |
| 10 | பிரிவு 80CCG (ராஜிவ் காந்தி பங்குகள் சேமிப்பு திட்டம் (RGESS) அதிகபட்ச வரிவிலக்கு ரூ.25000/– (முதலீட்டில் 50%) | | ரூ. |
| 11 | **நிகர வருமானம் (7–8–9)** | | ரூ. |

| | | |
|---|---|---|
| 12 | **அத்தியாயம் VIA ன் படி இதர வரிவிலக்குகள்:-** | |
| a | **பிரிவு 80D மருத்துவ காப்பீட்டில் முதலீடு:-** நீங்கள் மற்றும் உங்கள் குடும்பத்திற்கு (60 வயதிற்கு கீழ் ரூ.25,000, 60 வயதிற்கு மேல் ரூ.30,000) | ரூ. |
| | உங்கள் பெற்றோருக்கு (60வயதிற்கு கீழ் ரூ.25,000, 60வயதிற்கு மேல் ரூ.30,000) | ரூ. |
| | தடுப்பு மருத்துவ சோதனைக்கு (Health Checkup ரூ.5000/-) இது மேலுள்ள 25,000க்குள் அடங்கும். | ரூ. |
| | புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் (NHIS) | ரூ. |
| b | பிரிவு 80DD உங்களைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு செலவீனங்கள் செய்தல் – அதிகபட்ச வரம்பு ரூ.75,000/– கடுமையாக பாதிக்கப்பட்டவராயின் (80% மேல்) ரூ.1,25,000/– | ரூ. |
| c | பிரிவு 80DDB உங்களுக்கும், உங்களைச் சார்ந்தவர்களுக்கும் குறிப்பிட்ட நோய்களுக்கான மருத்துவ செலவீனங்கள் செய்தல் (அதிகபட்ச வரம்பு ரூ.40,000 மூத்த குடிமக்களுக்கு ரூ.60,000, மிக மூத்த குடிமக்களுக்கு 80,000) | ரூ. |
| d | பிரிவு 80E கல்விக் கடன் தங்களுக்கும், கணவன்/மனைவி மற்றும் குழந்தைகளுக்கு இவ்வருடத்தில் செலுத்திய வட்டித் தொகை– வரி உச்சவரம்பு இல்லை | ரூ. |
| e | பிரிவு 80EE முதன்முறையாக இவ்வருடத்தில் வீடு மற்றும் வீட்டுக்கடன் வாங்கியவர்களுக்கு வீட்டுக்கடனுக்கான வட்டியில் கூடுதலாக ரூ.50000/- வரை வரிவிலக்கு. | ரூ. |
| f | பிரிவு 80G- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு நன்கொடை கொடுத்தல்<br>100% தகுதியான அமைப்புகள்:<br>50% தகுதியான அமைப்புகள் ( தகுதியான அளவு- உங்கள் நிகர வருமானத்தில் 10%) | ரூ.<br>ரூ. |
| g | பிரிவு 80GGA - அறிவியல் ஆராய்ச்சிக்கு செலுத்திய நன்கொடை<br>80GGC-அரசியல் கட்சிகளுக்கு செலுத்திய நன்கொடை(அதிகபட்சம் ஆண்டு வருமானத்தில் 10%) | ரூ.<br>ரூ. |
| h | பிரிவு 80GG- வீட்டு வாடகைப்படி (HRA) பெறாமல் வீட்டு வாடகை செலுத்தியிருந்தால் – உச்ச வரம்பு ரூ.60,000 | ரூ. |
| i | பிரிவு 80TTA – வங்கி சேமிப்பு கணக்கில் பெறப்பட்ட வட்டி வருமானம் –உச்ச வரம்பு ரூ.10,000 இவ்வட்டியினை மேலுள்ள இதர வருமானத்தில் காட்டியிருக்க வேண்டும். | ரூ. |
| j | பிரிவு 80U – மாற்று திறனாளிகளுக்கான வரிவிலக்கு – இயலாமை 40%, அதற்கு மேல்– ரூ.75,000/–, கடுமையான இயலாமை 80% அதற்கு மேல் ரூ.1,25,000/– | ரூ. |
| 13 | **ஆண்டு நிகர வரி வருமானம் (10–11)** ( NET TAXABLE INCOME)<br>(அருகிலுள்ள 10 ரூபாய்க்கு முழுமை செய்யவும்) | ரூ. |

## வருமானவரி கணக்கீடு – 60 வயதிற்குள் உள்ளவருக்கான வருமானவரி கணக்கீடு

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | 1. நிகர வரி வருமானம் ரூ.2,50,000 வரை | வரி இல்லை | | |
| | 2. உங்கள் நிகர வரி வருமானம் ரூ.2,50,000 மேல் 5,00,000க்குள் இருந்தால் | நிகர வரி வருமானத்தில் முதல் 2,50,000/– கழித்து வரும் வருமானத்தில் 10% வரி | ரூ.( ) x 10% | ரூ. |
| | 3. உங்கள் நிகர வரி வருமானம் ரூ.5,00,000 மேல் 10,00,000 க்குள் இருந்தால வரை | நிகர வரிவருமானத்திலிருந்து ரூ.5,00,000 கழித்து வரும் வருமானத்தில் 20% வரி + ரூ.25,000/– | ரூ.( ) x20% + 25,000/- | ரூ. |
| | 4. உங்கள் நிகர வரி வருமானம் ரூ.10,00,000 மேல் | நிகர வரி வருமானத்தில் இருந்து ரூ.10,00,000 கழித்து வரும் வருமானத்தில் 30% வரி + ரூ.1,25,000 | ரூ.( ) x30% + 1,25,000/- | ரூ. |

| | | | |
|---|---|---|---|
| 15 | **செலுத்த வேண்டிய வரி :- SL.NO14 – 1 (அ) 2 (அ) 3 (அ) 4** | | ரூ. |
| 16 | **கழிக்க:** பிரிவு 87A ன்படி தள்ளுபடி அதிகபட்சம் ரூ.5,000<br>நிகரவரி வருமானம்(SL.NO.13) ரூ.5,00,000க்கு கீழ் உள்ளவர்களுக்கு மட்டும் | | ரூ. |
| 17 | செலுத்த வேண்டிய நிகர வரி (15–16) | | ரூ. |
| 18 | **கூட்டுக:** கல்வி தீர்வை – வரியிலிருந்து 2% (17)X2%<br>**கூட்டுக:** உயர்நிலை கல்வி தீர்வை– வரியிலிருந்து 1% (17)X1% | ரூ.<br>ரூ. | ரூ. |
| 19 | **வரி மற்றும் கல்வி தீர்வை** (17+18) | | ரூ. |
| 20 | **கழிக்க:–**சம்பள நிலுவை பெற்றமைக்கு வருமானவரி நிவாரண தொகை –பிரிவு 89(1) படிவம் –10E - சமர்பிக்க வேண்டும். | | |
| 21 | **கழிக்க:–இதுவரை பிடித்தம் செய்யப்பட்டுள்ளவரி** (TDS)<br>மார்ச 2016 முதல் ஜனவரி 2017 வரை கல்வி தீர்வையோடு | | ரூ. |
| 22 | **மீதம் பிடித்தம் செய்யப்பட வேண்டிய வரி** (19-20-21) **அல்லது (வரி அதிகம் பிடித்தம் செய்யப்பட்டிருந்தால்** திரும்ப பெற வேண்டிய தொகை) **(19+20–21)** | | ரூ. |

இடம்: கையொப்பம்

தேதி : பதவி

# படிவம்12BB: நிதியாண்டு 2016 - 2017
# (See rule 26C)

**ஊழியரின் வருமான வரி விலக்கு பெறும் விவரங்கள் மற்றும் சான்று பிரிவு192 வருமான வரிச்சட்டம்.**

1. ஊழியரின் பெயர் :-
2. முகவரி மற்றும் அஞ்சல் குறியீட்டு எண் :-

3. பிறந்த தேதி (உங்கள் PAN CARD தேதி) :-

| வரி விலக்கு பெற்ற விவரங்கள் அவற்றின் சான்றுகள் | | | |
|---|---|---|---|
| வ. எண் | வரிவிலக்கு | தொகை | சமர்பிக்கப்பட்ட சான்றுகள்/ விவரங்கள் |
| 1. | **வீட்டுவாடகைப்படி (HRA)**<br>அ. வீட்டுவாடகை செலுத்தப்பட்ட தொகை<br>ஆ. வீட்டு உரிமையாளரின் பெயர்<br>இ. வீட்டு உரிமையாளரின் முகவரி<br>ஈ. வீட்டு உரிமையாளரின் நிரந்தர கணக்கு எண் (PAN) வீட்டு வாடகை (ரூ.100000/- க்கு மேல் செலுத்திருந்தால் மட்டுமே | | |
| 2 | **வீட்டு கடனுக்கான வட்டி:**<br>அ. வீட்டுக்கடனுக்கான வட்டி செலுத்திய அல்லது செலுத்த வேண்டிய தொகை<br>ஆ. கடன் கொடுத்தவரின் பெயர்<br>இ. கடன் கொடுத்தவரின முகவரி<br>ஈ. கடன் கொடுத்தவரின் நிரந்தர கணக்கு எண் (PAN)-யிருந்தால் மட்டும். | | |
| **3.** | **அத்தியாயம் VIA படி வரிசலுகைகள்**<br>(80CCE= 80C+80CCC+80CCD) அதிகபட்ச வரிசலுகை **1.5**லட்சம்<br><br>அ) பிரிவு **80** C<br>**1.** ...............................................................................................<br>**2.** ...............................................................................................<br>3. ...............................................................................................<br>**4.** ...............................................................................................<br>**5.** ...............................................................................................<br>**6.** ...............................................................................................<br>**7.** ...............................................................................................<br><br>ஆ) பிரிவு 80CCC –.......................................................................<br>பிரிவு 80CCD – ...........................................................................<br><br>**அத்தியாயம் VIA ன் படி இதர வரிவிலக்குகள்:-**<br><br>**1.**பிரிவு 80D . ......................................................................<br>**2.**பிரிவு 80DD ... ......................................................................<br>**3.**பிரிவு 80DDB ......................................................................<br>**4.**பிரிவு 80E ......................................................................<br>**5.**பிரிவு 80G- ......................................................................<br>**6.**பிரிவு 80GG......................................................................<br>**7.**பிரிவு 80TTA ......................................................................<br>**8.**பிரிவு 80U ...................................................................... | | |

| சான்றிதழ் |
|---|
| நான் ____________________ த/பெ ____________________ மேலே கொடுக்கப்பட்ட தகவல் முழுமை மற்றும் உண்மையானது என்று சான்று அளிக்கின்றேன். |
| இடம்: |
| தேதி: |
| பதவி : கையொப்பம்/மற்றும் பெயர் |

# நடப்பாண்டு 2016 – 2017 பெறப்பட்ட வருமான விவரங்கள்

வருமானம் | விலக்குகள்

| MONTH/PARTICULARS | Basic pay | Spl pay pp | Grade pay | DA | HRA | CCA | MA | Other allowances | | Total | GPF/CPS | SPF | FBF | NHIS | Insurance | NSC | Prof tax | Income Tax | IT cess | Total deductions | Net pay recd |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| March 2016 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| April 2016 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| May 2016 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| June 2016 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| July 2016 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| August 2016 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| Sep 2016 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| Oct 2016 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| Nov 2016 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| Dec 2016 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| Jan 2017 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| Feb 2017 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| TOTAL | | | | | | | | | | | | | | | | | | | | | |
| DA Arrears 1 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| DA Arrears 2 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| DA Arrears 3 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| Bonus | | | | | | | | | | | | | | | | | | | | | |
| Sur.Leave | | | | | | | | | | | | | | | | | | | | | |
| Oth.Arrears | | | | | | | | | | | | | | | | | | | | | |
| Grand Total | | | | | | | | | | | | | | | | | | | | | |

கையொப்பம்

தலைமை அதிகாரி/சம்பள பட்டுவாடா அதிகாரி

# வருமான வரி சில விளக்கங்கள் நிதிஆண்டு 2016-2017

சரியான நிரந்தர எண் (PAN ) குறிக்கவும். தவறான நிரந்தர எண் (அ) நிரந்தர எண் இல்லையெனில் தங்கள் சம்பளத்தில் 20% (அ) அதற்கு மேற்பட்ட சதவீதமும் வரியாக வசூலிக்கப்படலாம் (பிரிவு 206AA)

**இந்த நிதியாண்டு 2016-2017 வருமானவரியில் ஏற்பட்ட மாற்றங்கள்**

வருமான வரி கணக்கீட்டில் எந்த மாறுதலும் இல்லை.
பிரிவு 87A- வின் படி நிகர வரி வருமானம் ரூ.5,00,000-க்கிற்கு கீழ் இருந்தால் வரியில் ரூ.5,000/- தள்ளுபடி.

**வீட்டு கடனுக்கான வட்டியில் கூடுதல் வரிவிலக்கு பிரிவு 80EE**

நீங்கள் இவ்வருடம் ரூ.50,00,000/- கீழ் புதியதாக வீடு வாங்கியிருந்தால் மற்றும் ரூ.35,00,000/- கீழ் வீட்டுக்கடன் பெற்றிருந்தால் வீட்டு கடனுக்கான வட்டியில் இருந்து கூடுதலாக ரூ.50,000/-யை வரி விலக்காக பெறமுடியும். அதாவது ரூ.2,00,000/- 24B-ன் படியும் ரூ. 50,000/- பிரிவு 80EE-ன் படியும் பெறலாம்.இக்கடனானது நீங்கள் வங்கியில் மட்டுமே பெற்றிருக்க வேண்டும்.இச்சலுகை முதன்முறையாக வீடு வாங்குபவர்களுக்கு மட்டுமே.

**பிரிவு 80GG வீட்டுவாடகை**

உங்களது சம்பளத்தில் வீட்டு வாடகைப்படி இல்லையென்றால் பிரிவு 80GGன் படி நீங்கள் செலுத்தும் வாடகைக்கு ரூ.60,000/- வரிச்சலுகையாக பெற முடியும். (ரூ.24,000/-ல் இருந்து ரூ60,000/- வரை உயர்த்தப்பட்டுள்ளது.

**பிரிவு 80CCD (1B) -CPS DEDUCTION**

CPS கழிவு இல்லாமல் ஊழியர்கள் 80CCE -ல் ரூ.150000/- கழிவுகள் பெற்றால் CPS கழிவினை பிரிவு 80CCD(1B)-ல் தனியாக ரூ.50,000/- வரை கழித்து வரிவிலக்கு பெறலாம்

(அல்லது)

CPS கழிவு இல்லாமல் 80C-ல் ரூ.1,50,000/-க்கு கீழ் கழிவு இருந்தாலோ CPS கழிவு ரூ.50,000/-க்கு மேல் இருந்தால் இவற்றினை பிரித்து ரூ.1,50,000/-க்கிற்கும் மீதமுள்ள தொகையினை 80CCD(1B) யிலும் வரிவிலக்குக ரூ.50,000/- வரை பெறலாம். ஆக மட்டும் CPS கழிவு பெறும் ஊழியர்கள் வரி சலுகையாக ரூ.2,00,000/- (1,50,000/-+50,000/-) வரை பெற முடியும்.

**உ.ம்.**

| விவரங்கள் | உதாரணம்:1 | உதாரணம்:2 |
|---|---|---|
| CPS இல்லாமல் 80C-ன் கழிவுகள் | ரூ.1,55,000/- | ரூ.1,15,000/- |
| CPS கழிவு | ரூ.45,000/- | ரூ.55,000/- |
| **மொத்த வரிச்சலுகை** | | |
| 80C-ன் படி | ரூ.1,50,000/- | ரூ.1,15,000/- + ரூ.5,000/- |
| 80CCD(1B) | ரூ.45,000/- | ரூ.50,000/- |
| **ஆக மொத்தம் வரிச்சலுகை** | **ரூ.1,95000/-** | **ரூ.1,70,000/-** |

**II- வீட்டு வாடகைப்படி (HRA) சில விளக்கங்கள்**

(a) வீட்டு வாடகைப்படி வரிவிலக்கு பெற வேண்டுமானால் நீங்கள் வீட்டு வாடகை செலுத்தியிருக்க வேண்டும்.

(b) வீட்டு வாடகைப்படி முழுவதுமாக வரிவிலக்கு பெற வேண்டுமானால் உங்கள் வருடாந்திர வாடகைப்படியுடன் 10% அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படியை கூட்டிக் கொள்ளவும். நீங்கள் செலுத்தும் வருட வீட்டு வாடகை இத்தொகைக்கு மேல் வருமானால் வீட்டு வாடகைப்படி முழுவதும் வரிவிலக்காக பெற முடியும்.

(c) பெற்றோருக்கு வாடகை கொடுக்கும் பட்சத்தில், வாடகைப்படியின் வரிவிலக்கு பெறலாம்.

(d) கணவன்-மனைவிக்கு இடையே வாடகை செலுத்தியிருந்தால் வாடகைப்படி வரிவிலக்கு பெற முடியாது.

(e) வீட்டு வாடகைப்படி மற்றும் வீட்டுக் கடனுக்கான வட்டி இரண்டினையும் கீழ்க்கண்ட சமயங்களில் வரிச்சலுகையாக பெற முடியும்.

1. பணியாற்றும் இடமும், வீட்டு கடனுக்கான வீடும் வெவ்வேறு நகரங்களில் அமைந்திருந்தால்,
2. இரண்டும் ஒரே நகரமாக இருந்தாலும், வீட்டு கடனுக்கான வீடும், பணியாற்றும் இடமும் கணிசமான தொலைவிலிருந்து, நீங்கள் வாடகை வீட்டில் தங்கியிருந்தால்.
3. வீட்டு கடனுக்கான வீட்டில் உங்கள் பெற்றோர் குடியிருந்து, நீங்கள் வாடகை வீட்டில் குடியிருந்தால்

மேற்குரியவை தங்களுக்கு பொருந்தியிருந்தால் வீட்டு வாடகைப்படியையும் வீட்டு கடனுக்கான வட்டியையும் வரிவிலக்காக பெறப்படும்.

(f) உங்கள் சம்பள பட்டியலில் வீட்டு வாடகைப்படி (HRA) பெறவில்லை எனில் வீட்டு வாடகைப்படி வரிவிலக்குக்கு பதிலாக பிரிவு 80GG படி வீட்டு வாடகை செலுத்தியிருந்தால் அதிகபட்சம் ரூ.24,000/- வரிவிலக்காக பெற முடியும்.

(g) நீங்கள் வீட்டு வாடகை ரூ. 3000/- த்திற்கு மேல் செலுத்தியிருந்தால் வாடகை ரசீதை சமர்பிக்க வேண்டும்.

(h) நீங்கள் வருடத்திற்கு ரூ.1 லட்சத்திற்கு மேல் வாடகை செலுத்தியிருந்தால் (மாதத்திற்கு ரூ.8,333pm) வீட்டு உரிமையாளரின் நிரந்தர கணக்கு எண்ணை சமர்பிக்க வேண்டும். நிரந்தர கணக்கு இல்லையெனில் உரிமையாளர் அதனைப்பற்றிய சான்றிதழ் கடிதம் தர வேண்டும்.

**III - வீட்டுக்கடன் - வட்டி மற்றும் அசல்**

1) வீடு கட்டுவதற்காக (அ) வாங்குவதற்காக பெறப்பட்ட கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டியினை ரூ.2 லட்சம் வரையிலும் (பிரிவு 24B) அசலினை ரூ.1,50,000/- வரையிலும் (பிரிவு 80C) வருமானத்திலிருந்து நீக்கி, வரிச்சலுகை பெற முடியும். இக்கடனானது 1.4.1999க்கு பிறகு பெற்றிருத்தல் வேண்டும். அதற்கு முன் பெற்றிருந்தால் ரூ.30,000/- மட்டுமே வரிச்சலுகையாக பெற முடியும். மற்றும் வீட்டு கடன் வாங்கிய தேதியிலிருந்து மூன்று வருடத்திற்குள் வீடு கட்டியோ, வாங்கியோ இருத்தல் வேண்டும்.
2) வீடு புதுப்பித்தல் (அ) மறு சீரமைப்புக்காக பெறப்பட்ட கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டியினை ரூ.30,000/- வரை (பிரிவு 24B) வருமானத்திலிருந்து நீக்கி வரிச்சலுகை பெற முடியும். செலுத்திய அசலுக்கு வரிச்சலுகை பெற முடியாது.
3) வீடு கட்டி முடிப்பதற்குள் வீட்டுக் கடனுக்கான வட்டியை, செலுத்தியிருந்தால் 5 பாகங்களாக பிரித்து செலுத்திய தொகையை, கட்டி முடித்த வருடத்திலிருந்து அவ்வருட வட்டியினையும் சேர்த்து ஒவ்வொரு பகுதியாக 5 வருடங்களுக்கு வருமானத்திலிருந்து நீக்கி வரிசலுகையை பெற முடியும்.
4) வீட்டுக் கடனை அடைப்பதற்கு இரண்டாவதாக வீட்டுக் கடன் வாங்கியிருந்தால் அதற்கான கடனுக்கும் வட்டி (அ) அசல் வரிச்சலுகை உண்டு.
5) வீடு கட்டுவதற்கோ (அ) வாங்குவதற்கோ வங்கியில் மட்டுமல்லாமல் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மூலமாக கடன் பெற்று அதற்கு வட்டி செலுத்தியிருந்தால் அவர்களிடம் வட்டி செலுத்தியதற்கான சான்று பெற்று அவ்வட்டியினை வருமானத்திலிருந்து நீக்கி வரிச்சலுகை பெற முடியும். ஆனால் செலுத்திய அசலுக்கு வரிச்சலுகை பெறவேண்டுமானால் வீட்டுக் கடனை வங்கி மற்றும் அறிவிக்கப்பட்ட நிறுவனங்களில் மட்டுமே பெற்றிருத்தல் வேண்டும்,
6) வீடு மற்றும் வீட்டுக் கடன் இருவர் (அ) பலர் இணை உரிமையாளராக இருந்து அதனை அனைவரும் திருப்பி செலுத்தியிருந்தால் தங்கள் பொறுப்பின் விகிதாசாரத்திற்கு ஏற்ப அனைவரும் வருமானத்திலிருந்து நீக்கி வரிச்சலுகை பெற முடியும். ஒவ்வொருக்கும் வட்டியில் உச்சவரம்பான ரூ.2 லட்சத்தையும் அசலில் ரூ.1,50,000/- லட்சமும் வரிச் சலுகையாக பெற முடியும்.
7) வீடு மற்றும் வீட்டுக் கடன் இருவர் (அ) பலர் இணை உரிமையாளர்களாக இருந்து ஒருவர் மட்டுமே வீட்டுக் கடனை செலுத்தியிருந்தால், அவர் மற்ற இணை உரிமையாளர்களிடம், அவர் மட்டும் வீட்டுக்கடனை செலுத்தியதாக ஒரு எளிய ஒப்பந்தத்தை எழுதிக்கொண்டு, மொத்த வட்டி மற்றும் அசலையும் வரிசலுகையாக பெற முடியும்.
8) ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகள் இருக்குமாயின் ஒரு வீட்டினை அவர் குடியிருக்கும் வீடாகவும் மற்ற வீடுகளை வாடகைக்கு விட்டதாகவும் வருமான சட்டப்படி கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். குடியிருக்கும் வீட்டிற்கு வீட்டு கடன் வாங்கியிருந்தால், ரூ.2 லட்சம் வரை வட்டியில் வரிச்சலுகை உண்டு. மற்ற வீடுகளுக்கு வீட்டு கடன் வாங்கியிருந்தால், வட்டி முழுவதையும் வருமான வரிவிலக்கு பெற முடியும். உச்ச வரம்பு கிடையாது. வாடகையை வீட்டு வருமானமாக காட்ட வேண்டும்.

**அன்பளிப்பு வருமானம் :**

கணவன்/மனைவி, சகோதரிகள், மைத்துனர்கள், பெற்றோர்கள், பெற்றோர்களின் சகோதர சகோதரிகள், கணவன்/மனைவியின் உடன் பிறந்த சகோதர சகோதரிகளின் கணவன்/மனைவி போன்ற இவர்களிடம் பெறும் எந்த பரிசு தொகையும் வரிக்குட்பட்டது அல்ல.

1. சுப நிகழ்ச்சிகளின் போது கிடைக்கும் அன்பளிப்பு தொகையும் வரிக்குட்பட்டது அல்ல.
2. உயில் மூலமாகவோ, அல்லது தனது வாரிசு சொத்தாகவோ பெறுவதும் வரிக்குட்பட்டது அல்ல.
3. ஓர் தனிநபர் மேல் கூறியவைவிட வேறு ஓர் தனிநபர் மூலம் ரூ.50,000/- க்கு மேல் அன்பளிப்பு தொகை (ரொக்கம்,அசையும் அசையா சொத்துக்கள்) இலவசமாக பெற்றால் வருமானவரி சட்டம் 56-ன் படி அவை வருமானமாக கருதி வரிக்கு உட்பட்டது ஆகும்.

**வரிவிலக்கு பெறும் முதலீடுகள் யாருடைய பெயரில் இருக்க வேண்டும்.**

1. ஆயுள் காப்பீடு – ஊழியர், மனைவி மற்றும் குழந்தைகள்
2. சேம நலநிதி (PPF) - ஊழியர், மனைவி மற்றும் குழந்தைகள்
3. தேசிய சேமிப்பு திட்டம் (NSC&NSS) – ஊழியர்
4. ULIP - ஊழியர், மனைவி மற்றும் குழந்தைகள்
5. வீட்டுக்கடன் - ஊழியர், கல்வி கட்டணம்- 2குழந்தைகள், கல்விகடன்- ஊழியர், மனைவி மற்றும் குழந்தைகள்
6. மருத்துவ காப்பீடு - ஊழியர், மனைவி மற்றும் குழந்தைகள்

**உங்கள் பெற்றோர் மற்றும் குழந்தைகள் உங்கள் வரி சேமிப்பிற்கு எவ்வாறு உதவலாம்.** பெற்றோருக்கு வாடகை தருவது மூலம் வாடகை படியை (HRA) வரி சலுகையாக பெறலாம். உங்கள் பெற்றோர் வரி கட்டுபவராக இல்லை என்றாலும் அல்லது உங்களை விட குறைந்த வரி அடுக்கில் (tax slab) இருந்தாலும் நீங்கள் உங்கள் பெற்றோருக்கு நீங்கள அன்பளிப்பு பணம் கொடுத்து அதை முதலீடு செய்து வருமானம் பெறலாம். அவ்வருமானத்திற்கு நீங்கள் வரி செலுத்த தேவையில்லை மற்றும் உங்கள் பெற்றோர் மூத்த குடிமக்களாகயிருந்தால் வங்கியில் அதிக வட்டியினை பெறலாம்.உங்கள் பெற்றோருக்கு மருத்துவ காப்பீடு செய்தால் தனியாக ரூ.25000/-யை (மூத்த குடிமக்கள் - ரூ.30000/-) நீங்கள் வருமானத்திலிருந்து நீக்கி வரி சலுகை பெற முடியும்.அவர்கள் உங்களை சார்ந்திருந்தாலும் சாராவிட்டாலும் இது பொருந்தும்.

உங்கள் குழந்தைகள் 18 வயதை தாண்டியவர்களாக இருந்தால் நீங்கள் அவர்கள் பெயரில் முதலீடு செய்யலாம். அதன்மூலம் முதலீட்டிலிருந்து வரும் வருமானத்திலிருந்து வரி கட்ட தேவையில்லை.

**சம்பள பட்டுவாடா அதிகாரியின் கடமைகள்:**

ஒவ்வொரு ஆண்டுக்கும், ஆண்டு தொடக்கத்திலேயே சம்பள பட்டுவாடா அதிகாரியானவர் தனது ஊழியர்க்கு அளிக்க போகும் சம்பளம், இதர சலுகைகள், இவற்றை கணக்கிட்டு கொண்டு, ஆண்டு நிகர வருமானத்தை உத்தேசமாக கணக்கிட்டு அதற்கான வருமான வரியை அறிந்து, அதை 12-ஆல் வகுத்து (மாத சம்பளம் எனில்) கிடைக்கும் தொகையை ஒவ்வொரு மாத சம்பளத்தில் இருந்தும் பிடித்தம் செய்ய வேண்டும்.அவ்வாறு வருமான வரியை பிடிக்கத்தவறினால் இந்திய வருமான வரி சட்டபிரிவு 201 மற்றும் 221-ன் படி அவர் “கடமை தவறிய அதிகாரி” “Assesee In Default” என்று கருதப்பட்டு, அங்ஙனம் பிடிக்க வேண்டிய வருமானவரி தொகைக்கு மாதம் 1% வீதம் வட்டி கணக்கிட்டு அவ்வட்டியினை சம்பள பட்டுவாடா அதிகாரியே தனது சொந்த செலவில் வருமான வரித்துறைக்கு செலுத்த வேண்டும். இங்ஙனம் வட்டி செலுத்தவேண்டியது வருமான வரிச்சட்டத்தில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.அத்தோடு மட்டுமின்றி பிரிவு 271(C)-ன் படி ஊழியர் தனக்கு எவ்வளவு வரி கட்ட வேண்டுமோ அதற்கு சமமான தொகையினை தண்ட தொகையாக சம்பள பட்டுவாடா அதிகாரியின் சொந்த செலவில் இருந்து வருமானவரித்துறைக்கு செலுத்த வேண்டும். மேலும் இந்திய வருமான வரிச்சட்டப்பிரிவு 276(பி)-ன் படி இங்ஙனம் வரிப்பிடித்தம் செய்ய தவறிய அதிகாரிக்கு 3 மாதம் முதல் 7 வருடங்கள் வரை சிறை தண்டனையும் கிடைக்கலாம். சம்பள பட்டுவாடா அதிகாரி பிரிவு 203(3)-ன் படி தான் எந்த ஊழியருக்கு எவ்வளவு வரி பிடித்தம் செய்திருக்கிறோம் என்பதனை Form24Q என்ற படிவத்தின் மூலம் ஒவ்வொரு காலாண்டுக்கும் e-Tds Return தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்தால் மட்டுமே ஊழியர்களுக்கான வருமான வரி கணக்கில் அது சேரும். அவ்வாறு தாக்கல் செய்வதற்கு கருவூலத்திலிருந்து BIN Number மற்றும் DDO Serial Number –யை பெற வேண்டும். அங்ஙனம் 4 காலாண்டும் தாக்கல் செய்த பிறகு ஊழியர்களுக்கு படிவம் 16-னை (Form 16) வருமான வரித்துறை வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து வழங்க வேண்டும். இதுவே அவர்களுக்கு வழங்கப்படும் வருமான வரிப்பிடித்த சான்றிதழ் ஆகும். அவ்வாறு ஒவ்வொரு காலாண்டுக்கும் சம்பள பட்டுவாடா அதிகாரி e-TDS Return தாக்கல் செய்யவில்லையென்றால் பிரிவு234E –ன் படி தவணை தேதியிலிருந்து நாளொன்றுக்கு ரூ.200/- அபராதம் விதிக்கப்படும். ஒருவேளை தாக்கலே செய்யவில்லையென்றால் பிரிவு271H-ன் படி ரூ.1,00,000/- அபராதமாக செலுத்த நேரிடும்.

**ஊழியர்களின் கடமைகள்:**

சம்பள பட்டுவாடா அதிகாரியானவர் தான் பிடிக்க வேண்டிய வரி தொகையை விட குறைவாக பிடித்தம் செய்துவிட்டால் ஊழியர் தனது நிரந்தர கணக்கு (PAN NO) எண்ணை வைத்து Chellan 280-ன் மூலம் நேரடியாக வங்கியில் செலுத்தலாம். அவை ரூ.10,000/-த்திற்கு மேல் செலுத்த வேண்டுமெனில் பிரிவு 234B, 234C-ன் படி தாங்கள் வட்டியினையும் சேர்த்து கட்ட வேண்டும். மேற்படி தாங்கள் கட்டிய வருட மொத்த வரி தொகையினை வருமான வரி வலைத்தளத்திலிருந்து (www.incometaxindiaefilling.gov.in) பதிவு செய்து Form26AS மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளலாம். நிதியாண்டின் முடிவில் ஜுலை மாதம் 31-க்குள்ளாக ரூ.2,50,000/- மேல் வருமானம் உள்ளவர்கள் கண்டிப்பாக வருமான வரி படிவத்தினை வருமான வரித்துறைக்கு தாக்கல் செய்ய வேண்டும். ரூ5,00,000/- மேல் உள்ளவர்கள் வருமானவரி படிவத்தினை இணைத்தளத்தின் (e-Filling) மூலமே சமர்ப்பிக்க முடியும். வருமான வரி அதிகமாக செலுத்தி இருந்தாலும் அல்லது பிடித்தம் செய்யப்பட்டிருந்தாலும் ஊழியர் சம்பள பட்டுவாடா அதிகாரியிடம் படிவம்16 (Form16) பெற்று வருமான வரி படிவத்தினை வருமான வரித்துறைக்கு சமர்ப்பித்தால் மட்டுமே அப்பணத்தை(Refund) திரும்பப் பெற முடியும். ஊழியர்கள் வங்கிகள் மற்றும் அரசுத்துறையின் சலுகைகளை பெற படிவம்16(Form16) மற்றும் வருமான வரிப்படிவம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஆகவே கால தவணைக்குள் முறையே தாக்கல் செய்து கொள்ளவும். 7-வது ஊதியக்குழு எதிர்நோக்கும் நிலையில் வருமான வரி நிலுவைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளவும்.இவை நீங்கள் வருமான வரி வலைத்தளத்திலிருந்து (www.incometaxindiaefilling.gov.in) உங்கள் நிரந்தர கணக்கு எண் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.

---

**FORM NO. 10-I [See rule 11DD] Certificate of prescribed authority for the Purposes of section 80DDB**

1. Name of Patient 2. Address 3. Father's name 4. Name and address of the person on whom the patient is dependent and his relationship with the patient. 5. Name of the disease or ailment (please see rule 11DD) 6. For diseases or ailments mentioned in item (i) of clause (a) of sub-rule (1), whether the disability is 40% or more (Please specify the extent) 7. Name, address, registration number and qualification of the specialist issuing the certificate, along with the name and address of the Government Hospital [see rule 11DD(2)]

**Verification**

This is to verify that I, Dr. ………………………s/o (w/o) Shri. ………………………., in the case of Shri. / Smt / Ms. ………………………, after considering the entire history of illness, careful examination and appropriate investigations, am of the opinion that the patient is suffering from ……………………….. disease / ailment during the previous year ending 31st March ………. I also certify (only in case of neurological diseases) that the extent of disability is more than 40% (strike off, if not applicable). I certify that the information furnished above is true to the best of my knowledge

**Date. …………………….. Signature Place ……………………. (Name and address)**

---

**FORM NO. 10-IA**[See sub-rule (2) of rule 11A]-**Certificate of the medical authority for certifying 'person with disability', 'severe disability', 'autism', 'cerebral palsy' and 'multiple disabilities' for purposes of section80DD and section 80U**

Certificate No. Date:

This is to certify that Shri/Smt./Ms……….. son/daughter of Shri………, age…..years M/F residing at,…………….

Registration No……… is a person with disability/severe disability* suffering from autism/cerebral palsy/multiple disability*.

2. This condition is progressive/non-progressive/likely to improve/not likely to improve*.

3. Reassessment is recommended/not recommended after a period of months/years*.

Sd/-(Neurologist/Pediatric Neurologist/Civil Surgeon/Chief Medical Officer*)

Name : ______________________ Address of Institution/Government hospital :

**Qualification/designation of specialist : _________________________ SEAL**

**IV – பிரிவு 80C முதல் 80U வரையுள்ள கழிவுகளைப்பற்றி அறிவோம்.**

| 80C | விவரங்கள் | நன்மைகள் | சோதனைகள் | பயனுள்ள குறிப்புகள் |
|---|---|---|---|---|
| பொது சேமநல நிதி (PPF) | பொது சேமநல நிதி (PPF) தபால் நிலையங்களிலும், 24 தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலும் மற்றும் ICICI வங்கிகளிலும் திறக்கலாம். இது ஒரு 15 ஆண்டுகால திட்டமாகும். முதிர்வுக்கு 15 ஆண்டுகள் கட்டாயம். மேலும் 5 ஆண்டுகள் நீட்டிக்க முடியும். வருடத்திற்கு குறைந்தபட்சம் ரூ.500/- முதல் அதிகபட்சம் ரூ.1,50,000/- வரை செலுத்தலாம். | சேமநல நிதி மூலம் ஈட்டப்படும் வட்டிக்கு வரி கிடையாது. இந்நிதிக்கு எதிராக கடன் வசதி உண்டு மற்றும் இடையில் சிறிய அளவு திரும்ப பெற்றுக் கொள்ளலாம். நீதிமன்ற உத்தரவுக்கு இணைக்கப்பட மாட்டாது. அரசு ஆதரவுடன் அதிக பாதுகாப்பான முதலீடு. | முதிர்வுக்கு 15 ஆண்டுகாலம் ஆகும். வட்டி விகிதங்கள் ஒவ்வொரு வருடமும் மாறுபடும். | ஒவ்வொரு வருடமும் 5-ம் தேதிக்குள் முதலீட்டில் வட்டி கணக்கிடப்படுவதால் 5-ம் தேதிக்குள் முதலீடு செய்வது நல்லது. சேமநல நிதி குழந்தைகள் பெயரிலும் திறக்கலாம். ஒவ்வொரு வருடமும் இதற்கு அளிக்கப்படும் வட்டி விகிதம் மாறுபடும் இந்த வருடத்திற்கு 8.1% ஆகும். |
| செல்வ மகள் சேமிப்புத்திட்டம் (SSA) | 10 வயதிற்கு கீழ்யுள்ள பெண் குழந்தைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் கணக்கை தொடங்கலாம். குறைந்தபட்சம் ரூ.1000/- முதல் அதிகபட்சம் ரூ.1,50,000/- வரை செலுத்தலாம். கணக்கு தொடங்கப்பட்ட வருடத்திலிருந்து 14 ஆண்டுகள் முதலீடு செய்ய வேண்டும். 21 –ம் ஆண்டு முதிர்வு பெறும். இந்த வருடத்திற்கு வட்டி 8.6% ஆகும். ஆண் குழந்தைகளுக்கும் பொன் மகன் திட்டம் உண்டு. அதற்கும் வரிசலுகை பெறலாம். | இத்திட்டத்தின் மூலம் பெறப்படும் வட்டிக்கு வரி சலுகை உண்டு. பெண்கள் 18 வயது அடையும் போது 50% பணத்தை படிப்பிற்கோ (அ) திருமணத்திற்கோ திரும்ப பெறலாம். அதிக பாதுகாப்பான முதலீடு. இத்திட்டம் ஒரு குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகளுக்கு மட்டுமே. | வெளிநாட்டு வாழ் இந்தியர்களால் இத்திட்டத்தில் முதலீடு செய்ய முடியாது. வட்டி விகிதங்கள் ஒவ்வொரு வருடமும் மாறுபடும். | தேவைப்படும் ஆவணங்கள் குழந்தைப் பிறப்பு சான்றிதழ், உங்கள் அடையாள மற்றும் முகவரி ஆதாரங்கள். குறைந்தபட்சம் ரூ.1000/- முதலீடு செய்ய வேண்டும் தவறினால் ரூ.50/- அபராதமாக செலுத்த வேண்டும். 21 வயதிற்கு முன்பே திருமணத்திற்காக கணக்கை முடித்து பணத்தை பெற்றுக்கொள்ளலாம். இதேபோன்று |
| தேசிய சேமிப்பு சான்றிதழ் (NSC) | NSC VIII 5 வருட கால அளவிற்கு பெறப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் இதற்கு அளிக்கப்படும் வட்டி விகிதம் மாறுபடும் 1.4.2016 முதல் 5 வருட பத்திரத்திற்கு 8.1%, வழங்கப்படுகிறது. | NSC பத்திரங்களை வைத்து வங்கியில் கடன் பெறலாம் TDS பிடித்தம் செய்யப்படாது. பத்திரம் மூலம் பெறும் வட்டி மீண்டும் முதலீடாக காண்பித்து வருமானவரி சலுகை பெறலாம். அரசு ஆதரவுடன் அதிக பாதுகாப்பான முதலீடு. | இதன்மூலம் பெறப்படும் வட்டி மீண்டும் வரிக்கு உட்பட்டது. | 1.4.2016ல் 100 ரூபாய்க்கு பெறப்பட்ட பத்திரம் 5 வருடங்களுக்கு 147.61 ரூபாயகவும் உள்ளது. வங்கி வைப்பு நிதியை விட (FD) NSC பத்திரம் ஒரு சிறந்த முதலீடு. இத்திட்டத்திற்கு முதலீடு செய்வதற்கான உச்சவரம்பு கிடையாது. |
| 5 வருட வங்கி மற்றும் தபால் நிலைய வைப்பு தொகை | இவை வங்கிகளில் இருக்கும் சாதாரண வைப்பு தொகை போன்றது. குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் வைக்கப்பட வேண்டும். | மிக எளிதான முறையில் முதலீடு செய்யலாம். முதிர்வு பெற்றதும் நம் வங்கி கணக்கிற்கு நேரடியாக வந்து சேரும். அதிக பாகாப்பானது. | இதன் மூலம் பெறும் வட்டி வரிக்கு உட்பட்டது. 5 வருடங்களுக்கு முன்பாக திரும்ப பெற முடியாது. | 1.4.2016 முதல் வங்கிகள் 7 முதல் 7.5% வட்டி அளிக்கிறது. மூத்த குடிமக்களுக்கு 7.5% முதல் 8% வரை வட்டி அளிக்கிறது. இவற்றின் மூலம் வங்கிகளில் கடன் பெற முடியாது. |
| ஆயுள் காப்பீடு (LIC) | ஆயுள் காப்பீடு நிறுவனங்களில் கால திட்டங்கள் (Term Plan) மிகச் சிறந்தது. உங்கள் வருட தவணைத்தொகையில் 10மடங்கு திட்டத்தில் இருத்தல் வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கு 15 மடங்கு இருத்தல் வேண்டும். உங்களைச் சார்ந்தவர்கள் இருந்தால் மட்டும் காப்பீட்டில் முதலீடு செய்யவும். வரி சேமிப்பிற்காக காப்பீடு திட்டத்தில் சேமிப்பு செய்ய வேண்டாம். | உங்கள் வருமானத்தில் 7லிருந்து 10 மடங்கிற்கு திட்டத்தொகையில் முதலீடு செய்யலாம். முதிர்வு காலங்களில் பெறப்படும் பணத்திற்கு பிரிவு 10(10)D வரிவிலக்கு உண்டு. | ஆயுள் காப்பீட்டில் அற நிலையத்துறை திட்டங்களைவிட (endowment plan) கால நிலைய (term plan) திட்டமே சிறந்தது. | இணைய தளத்தின் மூலம் காப்பீட்டின் தவணைத்தொகையை செலுத்தலாம். முகவர்கள் மூலம் முதலீடு செய்வதை விட இணையதளத்தின் மூலம் செய்யும் முதலீடு மலிவானது. காப்பீடு நிறுவனங்களுக்கு எதனையும் மறைக்க வேண்டாம். நீங்கள் தவறாக கூறியிருந்தால் உங்களைச் சார்ந்தவர்களுக்கு தேவைப்படும் போது காப்பீடு மறுக்கப்படலாம். |
| தேசிய ஓய்வூதிய திட்டம் (NPS) | இத்திட்டத்தின் படி தொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் மாதாமாதம் செலுத்தும் குறைந்தபட்சம் ரூ.1000/- அதிகபட்சம் ரூ.12000/- உடன் இந்திய அரசு தன் பங்கிற்கு குறைந்தபட்சம் ரூ.1000/- அதிகபட்சம் ரூ.12000/- செலுத்தும். இத்திட்டம் வரும் 2016-2017 நிதியாண்டு வரை தொடரும். இத்திட்டத்தில் சேர்ந்தவர்களுக்கு நிரந்தர ஓய்வூதிய கணக்கு எண் (PRAN) வழங்கப்படும். இத்திட்டம் தனிநபர்களுக்கு இரண்டு கணக்கு அடுக்குகளாக செயல்பாட்டில் உள்ளது. (TIER-1, TIER-2 ) | கணக்கு அடுக்கு -1 இத்திட்டத்தில் சேரும் சந்தாதாரர் ஓய்வு பெறும் காலத்திற்கு பிறகு தன் பணத்தைத் திரும்ப பெற முடியும். வருமான வரி சலுகை பிரிவு 80CCD மூலம்பெற முடியும். கணக்கு அடுக்கு -2 இது தன் விருப்ப சேமிப்பு கணக்கிலிருந்து எப்போது வேண்டுமானாலும் செலுத்திய தொகையை திரும்ப பெறலாம். வருமானவரி சலுகை கிடையாது. | இத்திட்டத்தில் திரும்ப பெறும் தொகை வரிக்கு உட்படும். 60 வயது வரை திரும்ப பெற முடியாது. கணக்கடுக்கு 2க்கு வரிச்சலுகை கிடையாது. | பட்ஜெட் 2015ன் படி நிறுவனங்கள் தன்னுடைய ஊழியர்களுக்கு இத்திட்டத்தில் பங்களிப்பு செய்தால் ஊழியர் அப்பங்களிப்பினை ரூ.50,000/- வரை வரி சலுகையாக பெற முடியும். பிரிவு 80CCD(2)<br><br>இது நாட்டின் மிகக் குறைந்த கட்டண ஓய்வூதிய திட்டம். |
| பரஸ்பர நிதியங்கள் (ULSS/ELSS) | ELSS என்பது வரி சேமிக்கும் பரஸ்பர நிதியாகும். குறைந்தபட்ச முதலீடு ரூ.500/- அதிகபட்சம் கிடையாது. | முதலீடு மூலம் கிடைக்கும் ஆதாயங்கள் வரிச் சலுகைக்கு உட்பட்டது. இதனுடைய முதிர்வு மூன்றாண்டுகள் மட்டுமே. இவை இணையதளத்திலேயே வாங்கி விற்க முடியும். | இதில் வரும் பங்கு சந்தையை சார்ந்துள்ளது. இது அதிக ஆபத்துகளை கொண்ட முதலீடு இதில் முதலீடு செய்வதற்கு முன் நன்றாக ஆராயவும். | தரகர் மூலம் முதலீடு செய்வதை விட இணையதளம் மூலம் முதலீடு செய்தால் 0.5% முதல் 1% அதிக வருமானம் ஈட்டி தரும். |
| காப்பீட்டு நிறுவனங்களில் ஓய்வூதிய திட்டங்கள் | பிரிவு 80CC மூலம் வரி சலுகை பெற முடியும். பொதுவாக இத்திட்டத்தில் வருடத்திற்கு 1 முதல் 2% வரை மட்டும் லாபம் கிடைக்கும். | இதில் நன்மைகள் எதுவும் கிடையாது. 4% வட்டி கிடைக்கும். தேசிய ஓய்வூதிய திட்டம், காப்பீடு ஓய்வூதிய திட்டத்தை விட சிறந்தது. | குறைந்த லாபம். சரணடையும் போது நீங்கள் முன்னர் பெற்ற வரிசலுகை திரும்பப் பெறப்படும். | இது அதிக செலவு பிடிக்கும் திட்டமாகும். சேமநல நிதி (PPF) (அ) தேசிய ஓய்வூதிய திட்டம் (NPS) இதற்கு மாற்றாக சிறந்த பலனை அளிக்கும். |

**80D மருத்துவக் காப்பீட்டில் முதலீடு:-** தங்களுக்கோ, கணவன் /மனைவிக்கோ மற்றும் குழந்தைகளுக்கோ மருத்துவக் காப்பீடு செய்திருந்தால் ரூ.25,000/- வரை நிகர வருமானத்திலிருந்து நீக்கி வருமான வரி சலுகை பெற முடியும். தாங்கள் 60 வயதிற்கு மேற்பட்டவராக இருந்தால் இக்கட்டணம் ரூ.30,000/- மாக உயர்த்தப்படும்.
மேலும், உங்கள் பெற்றோருக்கும் மருத்துவ காப்பீடு பெற்றிருந்தால் அவர்களுக்கு தனியே ரூ25,000/- வருமானத்திலிருந்து நீக்கி வரிச்சலுகையாக பெற முடியும். அவர்களில் ஒருவர் 60 வயதிற்கு மேற்பட்டவராக இருந்தால் இக்கட்டணம் ரூ.30,000/- வரை உயரும். இச்சலுகையானது பெற்றோர்கள் தங்களை சார்ந்திருந்தாலும், சாராவிட்டாலும் பொருந்தும். இவ்வரிச்சலுகை பெற காப்பீட்டுத்தொகை ரொக்கப்பணமாக செலுத்தக் கூடாது. காசோலை (அ) வரையோலை (அ) வேறு முறையில் செலுத்தலாம். காப்பீட்டிற்காக தடுப்பு மருத்துவ பரிசோதனை உங்கள் குடும்பத்தில் செய்யப்பட்டிருந்தால் அதற்கு ரூ.5,000/- வரை வரிசலுகை பெற முடியும். இச்சலுகை மேலே குறிப்பிட்ட ரூ.25,000/- த்திற்குள் அடங்கும்.
**பிரிவு 80DD:- மாற்றுத்திறனாளிக்கான மருத்துவ பராமரிப்பு மற்றும் செலவீனங்கள் செய்தல்:-** உங்களைச் சார்ந்து மாற்றுத் திறனாளி உங்கள் குடும்பத்தில் எவரேனும் இருந்தால் (கணவன் /மனைவி/குழந்தைகள்/பெற்றோர்/சகோதரன்/சகோதரி) அவர்களின் மருத்துவ பராமரிப்புக்கு (அ) மருத்துவ காப்பீட்டுக்கு செலவீனங்கள் ஏற்பட்டால் பிரிவு 80DD ன் படி ரூ75,000/- (அ) நீங்கள் செலவு செய்த தொகையில் எது குறைவோ அதை ஆண்டு வருமானத்திலிருந்து நீக்கி வரிசலுகை பெற முடியும். கடுமையாக பாதிக்கப்பட்டவராயின் (80% மேல்) ரூ.1,25,000/- வரை வரிச்சலுகை பெறமுடியும். அதற்கான படிவம் எண் 10-1A யில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரிடம் சான்று பெற்று சமர்பிக்க வேண்டும். உங்களைச் சார்ந்த மாற்றுத்திறனாளி பிரிவு 80U ன் படி வரிச்சலுகை பெற்றவராக இருத்தல் கூடாது.

**பிரிவு 80DDB மருத்துவ செலவீனங்கள் செய்தல்:-** தாங்கள், கணவன்/மனைவி/குழந்தைகள்/பெற்றோர்/சகோதரன்/சகோதரிகள் இவர்களுக்கு கீழ்க்கண்ட நோய்களுக்கு மருத்துவச் செலவீனங்கள் செலவழித்துள்ளீர்களேயானால் பிரிவு 80DDB-ன் படி செலவழித்தத் தொகை (அ) ரூ.40,000/- (மூத்த குடிமகனாக இருந்தால் ரூ60,000/-) வரை மிக மூத்த குடிமகனாக இருந்தால் ரூ80,000/- இதில் குறைந்தபட்சத் தொகையினை ஆண்டு வருமானத்திலிருந்து நீக்கிக் கொள்வதன் மூலம் வரிச்சலுகை பெற முடியும். அங்ஙனம் பெற படிவம் எண்10-1ல் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரிடம் சான்று பெற்று சமர்பிக்க வேண்டும்.இப்பிரிவின் படி அறிவிக்கப்பட்ட நோய்கள் நரம்பியல் நோய்கள், நடுக்குவாதம், புற்றுநோய், நோய்தடுப்பாற்றல் குறைபாடுகளின் நோய் கூட்டறிகுறி (எய்ட்ஸ்), சிறுநீரக செயலிழப்பு, இரத்த ஒழுக்கு, இரத்த அழிவு சோகை.

**பிரிவு 80E கல்விக்கடன் மூலம் வரிவிலக்கு:-** தாங்கள் கணவன்,மனைவி, குழந்தைகள் கல்விக்காக வங்கியில் கடன் பெற்றிருந்தால் அவற்றிற்கான செலுத்திய வட்டியினை இப்பிரிவின்படி வருமானததிலிருந்து நீக்கி வரிச்சலுகை பெற முடியும். இச்சலுகையானது தாங்கள் வட்டியை கட்டும் வருடத்திலிருந்து மேலும் 7 வருடத்திற்கு பெறலாம். கடனை அங்கீகரிக்கப்பட்ட வங்கி மற்றும் அறக்கட்டளை மூலமோ, பெற்றிருத்தல் வேண்டும். இச்சலுகை வட்டிக்கு மட்டுமே அசலுக்கு கிடையாது. உச்ச வரம்பு இல்லை.

**பிரிவு 80EE வீட்டு கடனுக்கான வட்டியில் கூடுதல் வரிவிலக்கு** : நீங்கள் இவ்வருடம் ரூ.50,00,000/- கீழ் புதியதாக வீடு வாங்கியிருந்தால் மற்றும் ரூ.35,00,000/- கீழ் வீட்டுக்கடன் பெற்றிருந்தால் வீட்டு கடனுக்கான வட்டியில் இருந்து கூடுதலாக ரூ.50,000/-யை வரி விலக்காக பெறமுடியும். அதாவது ரூ.2,00,000/- 24B-ன் படியும் ரூ. 50,000/- பிரிவு 80EE-ன் படியும் பெறலாம். இக்கடனானது நீங்கள் வங்கியில் மட்டுமே பெற்றிருக்க வேண்டும். இச்சலுகை முதன்முறையாக வீடு வாங்குபவர்களுக்கு மட்டுமே.

**பிரிவு 80G நன்கொடை கொடுத்தல்:-** தாங்கள் அரசாங்கத்திற்கோ (அ) குறிப்பிட்ட தொண்டு நிறுவனங்களுக்கோ நன்கொடை கொடுத்திருந்தால் அவற்றை வருமானத்திலிருந்து நீக்கி வரிச்சலுகை பெற முடியும். தகுதியான நன்கொடைகள் சிலவற்றிற்கு 100 சதவீதமும் சிலவற்றிற்கு 50 சதவீதமும் வரிச்சலுகை பெறப்படும். அரசாங்கத்தை தவிர மற்ற தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடை அளிக்கும்பொழுது நிறுவனத்தின் நிரந்தர கணக்கு எண் (PAN No) மற்றும் வருமான துறையின் பதிவு எண் சேர்த்து ரசீது பெற்றுக்கொள்ளவும். பணமாக கொடுக்கப்பட்ட நன்கொடை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். பொருட்களாக அளிக்கப்பட்ட நன்கொடை ஏற்றுக் கொள்ளப்படாது.

**பிரிவு 80GG வீட்டு வாடகை:-**உங்களது சம்பளத்தில் வீட்டு வாடகைப்படி இல்லை என்றால் பிரிவு 80GGன் படி நீங்கள் செலுத்தும் வாடகைக்கு வரிசலுகை பெற முடியும். இச்சலுகை பெற சொந்த வீடு இருத்தல் கூடாது. சொந்த வீடு இல்லாத ஓய்வூதிய தாரர்கள் இச்சலுகையில் பயன் பெறலாம். அதாவது மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/-வீதம் 12 மாதங்களுக்கு ரூ.24,000/- பெறலாம் (அ) நிகர வருமானத்தில் 25% (அ) ஆண்டு நிகர வருமானத்தில் 10% கணக்கிட்டு நீங்கள் செலுத்திய வாடகையிலிருந்து கழித்த தொகை இம்மூன்றில் எது குறைவோ அதை சலுகையாக பெற முடியும்.

**பிரிவு 80TTA சேமிப்பு கணக்கிலிருந்து பெறப்படும் வட்டி:-** அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலோ (அ) தபால் நிலையங்களிலோ (அ) கூட்டுறவு நிறுவனங்களிலோ தொடங்கப்பட்ட சேமிப்பு கணக்கிலிருந்து பெறப்பட்ட வட்டி வருமானத்தில் அதிகபட்சம் ரூ.10,000/- வரி விலக்காக எடுத்துக் கொள்ளலாம். நீங்கள் கிடைக்கப் பெற்ற முழு வட்டியையும், இதர வருமானங்களில் காட்டியிருக்க வேண்டும்.

**பிரிவு 80U மாற்றுத்திறனாளிகளுக்கான வரி விலக்கு:-** தாங்கள் ஒரு மாற்றுத்திறனாளியாக இருப்பின் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரிடமிருந்து சான்றிதழ் பெற்று ரூ.75,000/- (40% மேல் பாதிக்கப்பட்டிருந்தால் (அ) ரூ.1,25,000/-(80% மேல் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தால்) ஆண்டு வருமானத்திலிருந்து நீக்கி வரிச்சலுகை பெற முடியும்.

உங்களுடைய வரிகள் பற்றிய சந்தேகங்களுக்கும், e-TDS Return தாக்கல் பதிவேற்றம் செய்வதற்கும் & வருமானவரி தாக்கல் செய்வதற்கும், BIN Number மற்றும் BIN Amount தெரிந்துகொள்வதற்கும், Form16 பெறுவதற்கும் மற்றும் எல்லா வித வரிகள் சம்பந்தப்பட்ட விளக்கங்களுக்கு எங்களை தொடர்புகொள்ளலாம்.

**Please Contact Us :**

**For Chennai**- Mr.A.Vijay Kumar Ph.9962422242, Mr. Kumar – Ph.9843635991,
Office Address at :- No.23/1 Azhagiri Nagar 5th Street, Near Hotel Vasantha Bhavan, 100ft Road, Vadapalani, Chennai-26.

**For Vellore –** Mr. Santhosh-9442293777& Mr. Dinesh 9788888294
Office Address at :- No.7/48, 1st west Cross Road, Gandhinagar, Katpadi, Vellore-632006

**For Kanchipuram and Coimbatore –**
CCA-Mr. Kalidass -8220841999, Mr. Anbalagan –Ph.8220841999 No.28/38 Aram Valatheeswarar Kovil Street Kanchipuram-631501.

For Bulk downloading of Income Tax Calculation Sheet, Average TDS calculator, Tax arrears relief calculator-Form 10E, E TDS return filing, Form 16 – Please visit our website -**www.indiantaxhouse.com**,**email: suvigroup@gmail.com**.

**For doubts regarding Insurance (all types of Insurances), housing loans contact –Mr. HANS, Mob-9444141499. Email –hma48344@gmail.com**